[1987 மார்ச் 28

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் வட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

220—(*வினா எண் 10544) திரு. மா. சின்னராசு: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுக்கா இரும்பி பாறை, மூடுதுறை, இலுப்பநத்தம், சின்னக்கள்ளிப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ள அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுக்கா, இரும்பி பாறை, மூடுதுறை, இலுப்ப நத்தம், சின்னக்கள்ளிப்பட்டி ஆகிய கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதுமில்லை. இக்கிராமங்களில் தற்போது செயற்பட்டு வரும் குடிநீர்த் திட்டங்களினால் போதுமான அளவு நீர் மக்களுக்குக் கிடைத்து வருகிறது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் குறிப்பிட்ட இந்த நான்கு கிராமங்களும் அதோடு தேக்கம்பட்டி என்ற ஒரு கிராமமும் ஆண்டு முழுவதும் தண்ணீர் தட்டுப்பாடுள்ள கிராமங்கள் ஆகும். வறட்சிக் காலங்களிலே மட்டுமல்ல, மற்ற நேரங்களிலும் நீர் ஆதாரமே இல்லாமல் குடிநீர் கிடைக்காத பகுதிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதிகள் பவானி ஆற்றிற்கு அருகாமையில் இருக்கிற காரணத்தினால், பவானி ஆற்றிலிருந்து அந்தப் பகுதிக்கு நீர் வழங்குவதன் மூலம் ஏற்கெனவே பொய்த்து விட்ட நீர் ஆதாரங்களுக்கு ஒரு சப்ஸ்டிட்யூட் என்ற முறையிலே பவானி ஆற்றிலிருந்து நீர் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் கொடுத்து நிர்வாகப் பொறியாளர்களும் அதை ஆய்வு செய்திருக்கிறார்கள். ஆகவே குடிநீர் வடிகால் வாரியம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு அதை விரைவுபடுத்தி இந்த ஆண்டிலேயே

1987 மார்ச் 28]

அந்தப் பகுதிக்கு—வறட்சிப் பகுதி என்பதை முன்னிட்டு—குடிநீர் கொடுக்கச் செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக்குடிநீர்த் திட்டம் என்பது நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து பயன்படுகிற ஒரு திட்டம் ஆகும். வறட்சியை ஒட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எடுத்துக் கொண்டு செயல்படுத்துவது என்பது சாத்தியமற்ற ஒன்று. வறட்சிக் காலத்திலே போர்க் காலப் பணிகளைப் போல், வேகமாகச் செயல்பட்டு முடிந்த அளவுக்கு தண்ணீர் சேதப்படாமல் பயன்படுத்துவதுதான் இப்போது குடிநீர் வாரியத்தின் வேலையாக இருக்கிறது. ஆகவே அந்த வகையில் எந்த கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் தற்போது எடுத்துக் கொள்வதற்கு இல்லை.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது என்னுடைய தொகுதியாக இருக்கிற காரணத்தினால் அங்கே குடிநீர்ப் பிரச்சினை மிகவும் கடுமையாக இருப்பதால் தான் இந்தத் திட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டு குடிநீர் வடிகால் வாரியமும் அதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். அதை விரைந்து நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் தருவார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதிலே எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் இந்த வறட்சிக் காலத்திற்குள்ளே அதை நிறைவேற்றித் தர முடியுமா என்று கேட்டதற்குத்தான் நான் பதில் சொன்னேன். இப்போது பல திட்டங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதைப் போல் இந்தத் திட்டத்தையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை.